[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரக் குறிப்பும் இல்லை. ஹைதர் எண்டர்பிரைசஸ் கம்பெனியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டு விடப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு இந்த வழக்கு நடைபெற்று வருகிறது.

திரு. ரா. உமாநாத் : இது 16 இலட்சம் ரூபாய் சம்பந்தமான முக்கிய விஷயம். 16 இலட்சம் ரூபாய் என்பது ஒரு ஸப்ஸ்டான்ஷியல் அமௌண்ட். ஜாமீன் கொடுக்கப்பட்டவர் அதையும் மீறி வெளிநாட்டுக்குப் போனதாகச் சொல்லப்படுகிறது. எங்களைப் போன்றவர்கள், இது சம்பந்தமில்லாது அரசியல் சம்பந்தப்பட்டு ஜாமீனில் விட்டாலும் கூட ஸ்பெஷல் பிராஞ்ச் எங்களை 'பாலோ' செய்துகொண்டு விழிப்போடு இருப்பார்கள். அப்படியிருக்கும்போது 16 இலட்சம், இது பெரிய அமௌண்ட், சம்பந்தப்பட்ட விஷயத்தில் இந்த மாதிரி ஒருவர், 'பெயிலில்' விடப்பட்டு, அரசாங்கம் எதிர்த்தும் 'பெயிலில்' விடப்பட்டு அவர்களை 'பாலோ' செய்து அவர்கள் 'பெயிலில்' இருந்து 'ஜம்ப்' செய்யாமல் இருக்க விழிப்போடு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? அப்படி நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் ஏன் எடுக்கவில்லை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வழக்கு மன்றம் மூலம் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கைப்பற்றுகிற எண்ணெய் கூட நாங்கள் பாதுகாப்பில் வைத்திருந்தால் கெட்டுவிடும் என்ற நிலைமை இருதரப்பாருக்கும் இருக்கிறது. எனவே கைப்பற்றியதை நாமே விற்று அதற்குரிய பணத்தை வங்கியில் வைத்துவிடலாம் என்று வழக்கு மன்றத்தில் எடுத்துச் சொன்னபோது வழக்கு மன்றத்தில், அதற்குரியவர்கள் அதை விற்று அந்தப் பணத்தை அவர்கள் வங்கியில் வைக்க வேண்டும் என்று தீர்ப்பு வந்தது. நாம் வாதாடியும் அது நிறைவேறவில்லை, ஜாமீனில் விடுவதும், விடக்கூடாது என்று மறுத்தும்கூட வழக்கு மன்றம் விட்டு விட்டது. வெளிநாடு போவதைத் தடுப்பது என்பது மத்திய அரசின் பொறுப்பில் இருப்பதால்—அவர் போனாரா இல்லையா என்பது பற்றிய விவரக் குறிப்பு இல்லை—அது நம் கையில் இல்லை, அவர்கள் கையில்தான் இருக்கிறது.

கச்சா முந்திரி ஒதுக்கீடு

*வினா எண். 225—திரு. ஜே. ஹேமச்சந்திரன் திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்திலுள்ள எத்தனை முந்திரி ஆலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து கச்சா முந்திரி ஒதுக்கீடு பெறப்படுகிறது?

1981 பிப்ரவரி 7]

(ஆ) அதனை சீரான முறையில் விநியோகிக்க மாநில அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 49.

(ஆ) மைய அரசின் நிறுவனமான இந்திய முந்திரி நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட கச்சா முந்திரியைத் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இந்திய முந்திரிக் கழகம் விநியோகிக்கிற கச்சா முந்திரியை ஒழுங்காக உபயோகிக்கப் படுத்தவில்லை என்று புகார் இருப்பதால் சென்ட்ரல் காஷ்யூ கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாக முந்திரியை மாநில அரசு பெற்று கேரள மாநிலத்தில் செய்வது போல் ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தி அந்த நிறுவனத்தின் வழி அந்த முந்திரியை ஆலைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரித் தொழில் வளர்ச்சி முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்கமாகக் கொண்டு ஒரு முந்திரி வாரியம் அமைக்க செயற்குறிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி அது மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி ஆலைகளுக்கு கச்சா முந்திரி அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு, அந்த அளவிலே கொடுக்கப்பட இல்லை என்றும், அப்படி இந்த கச்சா முந்திரியை சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் வழங்காத காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்திலே வேலை செய்கின்ற அனைத்துத் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே கச்சா முந்திரி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும், இதுபோன்ற திருநெல்வேலி மாவட்டத்திலும் சுமார் முக்கால் லட்சம் தொழிலாளர்கள் இந்த முந்திரி ஆலைகளிலே வேலை செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் தமிழ் நாட்டிற்கு 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கிய கச்சா முந்திரி எத்தனை டன்கள் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு, 4,350 டன்களும், 1980–81 ஆம் ஆண்டு 1,300 டன்களும் இந்திய முந்திரி கார்ப்பரேஷன் நிறுவனம் மூலமாகத் தமிழக அரசு பெற்றிருக்கின்றது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி கோட்டா ஒதுக்கப்பெற்ற பாக்டரிகளிலே வேலை நடைபெறுவதற்கு உத்தரவாதம் செய்யப்படுமா? கோட்டா இல்லாத பாக்டரிகள் மத்திய முந்திரிக் கழகத்திடம் அதிகப்படியான கோட்டாவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது 49 ஆலைகளுக்கு மட்டும் தான் இந்த கச்சா முந்திரி கோட்டா கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ நூற்றுக் கணக்கான மில்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்றன. கேரள மாநிலத்திலே இருந்து கச்சா முந்திரி தமிழ்நாட்டிற்கு வரமுடியாத அளவிலே தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இங்கே தமிழகத்திலே வன இலாக்கா துறையின் கீழ் நாம் முந்திரிகளை ஏலத்திலே விடுகின்றோம். அப்போது இங்கிருந்து அதிகமான முந்திரி கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்படுவதாக பல புகார்கள் இருக்கின்றன. இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் போதிய அளவிற்கு கச்சா முந்திரி கிடைக்காத நிலையில், இங்கிருந்து கேரளாவிற்குச் சென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்னையை விளக்கிக் கொண்டு போகக் கூடாது. கேள்வியாக சுருக்கமாய்க் கேட்க வேண்டும்.

திரு. பொ. விஜயராகவன்: தமிழ்நாட்டில் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரியை சீராக விநியோகம் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முந்திரி தொழிற்சாலைக்கு முந்திரிகளை அளிக்கின்ற உரிமை மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து கச்சா முந்திரி அதிக அளவுக்கு வாங்கி, தமிழக முந்திரி ஆலைகளுக்கு வழங்குவதற்கு ஒரு யோசனையை தமிழக அரசு மத்திய அரசுக்கு தெரிவிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு இதுபற்றிய குறிப்பு ஒன்றை தமிழக அரசு அனுப்பி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் மூலமாக நமது நாட்டிற்குத் தேவையான கச்சா முந்திரியை ஆப்பிரிக்கா கண்டம் போன்ற நாடுகளிலே இருந்து இறக்குமதி செய்து, அதிலிருந்து விநியோகம் செய்யப்படுகிறது. அந்தக் கார்ப்பரேஷனில் தமிழகத்திற்குப் பிரதிநிதித்துவம் உள்ளதா? இல்லையெனில், பிரதிநிதித்துவம் பெற்று, அதிக கோட்டா முந்திரியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது கொச்சியிலுள்ள இந்திய முந்திரி நிறுவனத்திலே தமிழ்நாட்டிற்கு பிரதிநிதித்துவம் இல்லை. தமிழ்நாடு அரசுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று மைய அரசை தமிழக அரசு வற்புறுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண். 226 ஒத்திவைக்கப்பெறுகிறது.